www.tamilarangam.net

# புதிய பாதை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகாரபூர்வ ஏடு தமிழகத்தில் 1-00

காதம்.3 செப்டம்பர்/அக்டோபர் 1985 அன்பளிப்பு 2-00 சுவடு 9, 10

# அக்டோபர் புரட்சியின் நினைவு தினமும் நமது தேசிய விடுதலைப் போராட்டமும்



வர்க்க உணர்வுடன் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாம் 1917ல் ரூசியாவில் இடம் பெற்ற அக்டோபர் புரட்சியின் 68வது நினைவு நாளைவெறும் சம்பிரதாய சடங்காகக் கொண்டாடவில்லை.

புரட்சிப் போராட்டங்களில் இரத்தமும், கண்ணீரும் ஏழைகளுக்கு; ஆட்சி அதிகாரம் முதலாளிகளுக்கு என்பதே அக்டோபர் புரட்சியின் வெற்றி வரைக்கும் உலக வரலாற்று நடைமுறையாக இருந்தது.

வரலாற்றின் ஆரம்பக் காலகட்டத்தில் அடிமைச் சொந்தக்காரர்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த அடிமைகள் போராட்டத்தில் சிந்திய இரத்தத்தின் கனிகளை நிலப்பிரபுக்கள் பறித்துக்கொண்டனர். பின்னர் நிலப் பிரபுக்களின் கொடுங்கோன்மைக் எதிராக ஏழை விவசாயிகளது போராட்டங்களின் பெறுபேறுகளை முதலாளிகள் தட்டிப்பறித்தனர். பிரபலமான பிரான்சுப் புரட்சியிலும், அமெரிக்கப் புரட்சியிலும்கூட இதுவே நடந்தேறியது.

போராடுவது மக்கள்; முடிசூடுவது முதலாளிகள் என்ற 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளின் வரலாற்றைத் தகர்த்தெறிந்து, போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தொழிலாளர்களும், அவர்களது அணியில் முதன்மை பெற்ற விவசாயிகளும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் மக்களும் ஆட்சி அதிகாரத்தைதாமே கைப்பற்றிக் கொண்ட மகத்தான வரலாற்றின் திருப்பு முனையாக அக்டோபர் புரட்சியினை நாம் காண்கின்றோம். உலகின் சகல உழைக்கும் மக்களினதும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினதும் போராட்டங்கள் தத்தமது வெற்றி தொடர்பாக, அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கும், அக்டோபர் புரட்சியின் படிப்பினைகளுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளன. இதற்கு நாமும் நமது விடுதலைப் போராட்டமும் விதிவிலக்கல்ல.

அக்டோபர் புரட்சி, அதற்கு முன்னம் இடம் பெற்ற முதலாளித்துவ புரட்சிகளில் இருந்தும், பரீசில் தோற்றுப்போன தொழிலாளி வர்க்க எழுச்சியிலிருந்தும் நிரம்பவே கற்றுக் கொண்டுள்ளது. வரலாற்றின் இத்தகைய முன்பாய்ச்சலை ஆராய்ந்தே தோழர் கார்ல்மாக்ஸ் அவர்கள் முதலாளித்துவ வளர்ச்சியுடன் உருவாகி வந்த உலகின் முன்னணி வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சிபற்றியும், பாட்டாளிகளின் அமைப்பு ரீதியான புரட்சிகர ஒற்றுமை பற்றியும், முத

(6ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக வடிவெடுத்திருக்கும் இவ்வேளையில், நடக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் மக்களின் அடிப்படை பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியாதென்பதற்கு கடந்தகால வரலாறுகள் சான்றாகும். பிரதானமாக இலங்கை அரசைப் பார்க்கையில் அது ஒரு முதலாளித்துவ சார்பு அரசாகும். அது ஆளுமையை பரவலாக்காமல் ஓரிடத்தில் குவிக்கின்றது. அதனால் தமிழ் பேசும் மக்களினதோ அன்றி சிங்கள மக்களினதோ பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தை இறுக்கமாகக் கட்டியமைப்பதே இதன் நோக்கமாய்க் கொண்டு செயற்பட்டு வருகிறது. அப்படி ஏதாவது செய்ய முடியுமென்றால் அது சர்வாதிகாரமுறையாக இருக்குமே தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது.

உதாரணமாக கடந்த 1956, 1965க்களில் ஒருசில பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் நடந்து கொண்டிருந்த காலகட்டத்திலே, அமுல்படுத்தப்பட்ட தனிச்சிங்கள சட்டம், அடையாள அட்டைச் சட்டம், நாடு கடத்தல் சட்டம் என்பவை எம்மை ஒரு பக்கத்தால் ஏமாற்றி மறுபக்கத்தால் ஒடுக்கும் அவர்களுடைய குள்ளதந்திரத்தை அம்பலப்படுத்தியுள்ளது. 20 வருடங்கள் மனித சமுதாயம் முன்னேறிய பின்னும் இன்று அதே பாணியில் இருந்து இம்மியளவும் மாறாது நாடகமாடமுனைகிறார் இந்த ஜே.ஆர். அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டில்; ஆயுத இறக்குமதி நிறுத்தப்படும் என்று கைச்சாத்திட்டபின்பே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஜே.ஆர். அதையும் மீறி சமகாலத்தில் பேச்சுவார்த்தையும், ஆயுத இறக்குமதியையும் செய்து கொண்டிருந்தார். ஒரு வேளை இது உள்நாட்டுப் பிரச்சனையாக இருந்தாலும் தனக்கு சாதகமாகப் பாவித்து அன்னிய நாடு எம்நாட்டை ஆக்கிரமித்து விடுமோ என்ற ஆபத்துக் கூட சிறிலங்காவைப் பொறுத்தவரை அறவே இல்லை, வேறுநாடுகளைப்போல் எல்லைத் தகராறுகளும் இல்லை, இந்நிலையில் ஆயுதஇறக்குமதி ஏன் என்று நாம் சிந்திக்கையில் நம்மை திட்டமிட்டு அழிக்கவென்பதே பதிலாகும். இந்நடவடிக்கைகளை கட்டுப் படுத்தாமல் நாம் நடத்தும் பேச்சுவார்த்தை என்பது, நம்மை நாமே அழிப்பதற்கு மீண்டும் இடமளித்தவர்களாவோம் என்றே பொருள்படும்.

இதற்காக விடுதலைப் போராட்டத்தின் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் நாம் அறிந்து கொள்ளாதவர்களல்ல இப்பேச்சுவார்த்தையை நாமாக முறிப்பதென்பது, ஜே.ஆரின் பிரச்சனையை நாமே முன்னின்று தீர்த்து வைப்பது போன்றதாகும். தற்போதைய நிலையில் இப்பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தி சிறிலங்காவில் உள்ள முற்போக்குச் சக்திகளும், மற்ற மற்றக் கட்சிகளும், முற்றும் புத்தபிக்குகள் போன்றோரும் தத்தம் வர்க்க நலன்களைப் பாதுகாக்கும் நோக்கோடு செயற்பட தொடங்கிவிட்டனர். மேலும் உலகநாடுகளும், இந்தியாவும் எமக்குச் சார்பாக செயற்படத் தொடங்கியுள்ளனர். உதாரணமாக இந்திராகாந்தி தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை மட்டுமே அங்கீகரித்திருந்தார்

ஆனால் தற்போது ராஜீவ்காந்தியால் நடத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளில் விடுதலை இயக்கங்களுக்கும் சம அந்தஸ்துக் கொடுத்து நடத்துவது என்பது மறைமுகமாக எமக்குக் கொடுக்கப்பட்ட அங்கீகாரம் எனவே கருத வேண்டும்.

எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் தகுந்த முறையில் கையாளப்பழகிக் கொள்ள வேண்டும். தொடர்ந்து போர் நெருக்கடிகளுக்குள்ளும், சித்திரவதைகளுக்குள்ளும் வாழும் மக்களுக்கு நாம் ஒரு தற்காலிக அமைதியை கொடுக்க விரும்பினால், அதற்கான நடைமுறையாவது தகுந்த முறையில் நடைமுறைப்படுத்த முயலவேண்டும்; அது தவறின் 1918ம் வருடம் சோவியத் ஜெர்மனி சமாதானப் பேச்சுவார்த்தைபோல் உரிமைகளையும் விட்டுக்கொடுத்து ஊடுருவவும் விடுவது போலாகக் கூடாது. இந்நடவடிக்கைகளில் நாம் சிறிது

(12-ம் பக்கம் பார்க்க)

## சமாதானம்

இடதுசாரி சமூக ஜனநாயக வாதிகளில் பெரும்பாலோர் செய்ததுபோல "சமாதானம் வேண்டும்" என்று வாயால் பிரச்சாரம் செய்ததோடு போல்ஷ்விக்குகள் நின்றுகொள்ளவில்லை. யுத்தவெறி கொண்ட ஏகாதிபத்திய முதலாளிகளை தலைகுப்புறக் கவிழ்ப்பது என்ற அளவிற்கு சமாதானத்திற்காக தீவிரமாக புரட்சிகரமான போராட்டத்தை நடத்த வேண்டும்.

"லெனின்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நமீபியா மக்களின் விடுதலைப் போராட்டம்

இன்றைய நிலையில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பிற்குள்ளாகிவரும் தமிழீழம் போன்று நமீபியாவும் தென்ஆபிரிக்க ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகி வருகின்றது. இனவாத சிறிலங்கா பெரிதும் இராணுவபலம் உடைய நிலையில் இல்லையாகையால் இராணுவ பலன் வாய்ந்த நிறவெறி தென் ஆப்பிரிக்கா இராணுவம் நமீபியாவை ஆக்கிரமித்துள்ள விதத்தில் தமிழீழ மக்களை ஆக்கிரமிக்க முடியாதுள்ளனர். உலகிலேயே அந்நிய இராணுவத்தினர் ஆக்கிரமிப்பதற்குள்ள நாடு நமீபியாவாகும். இங்கு 12 நமீபியா பிரசைக்கு ஒரு தென் ஆபிரிக்க இராணுவத்தினர் வீதம் தென் ஆபிரிக்கா நமீபியாவின் மீது தனது இராணுவத்தை கட்டிவருகிறது. இத்தகைய இராணுவ ஆக்கிரமிப்பிற்கு தென் ஆபிரிக்கா சில பொய்க் காரணங்களை முன்வைக்கின்றது. உதாரணமாக தென் ஆபிரிக்காவின் பாதுகாப்பிற்கு நமீபியா முக்கியமாக விருப்பதால் நமீபியாவைத் தனது ஆளுமைக்குள் வைத்திருப்பதாகக் கூறுகிறது. அத்திலாந்திச் சமுத்திரத்தில் கேந்திர ஸ்தானமாக அமைந்திருப்பதாலும் தென் ஆபிரிக்காவின் பாதுகாப்பிற்கு இத்துறைமுகம் முக்கியமானதாக அமைந்திருப்பதாலும் தென் ஆபிரிக்காவின் நட்புறவு நாடுகளான வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பிற்கு இது முக்கியமானதென்றும் தென் ஆபிரிக்கா காரணம் காட்டுகின்றது.

இவ்வாறு தனது இராணுவ பலத்தை நமீபியாவில் கூட்டிவரும் தென் ஆபிரிக்க நிறவெறி அரசு, நமீபியாவில் அண்டை நாடுகளான அங்கோலா, பொற்சுவானா, சம்பியா போன்ற நாடுகளையும் அடிக்கடி தாக்கி வருகின்றது.

இவ்வாறு, நமீபியா மக்களையும், அவர்களின் அயல்நாட்டு மக்களையும் ஆக்கிரமித்து வரும் தென் ஆபிரிக்க நிறவெறி அரசின் ஆட்சிக்கும், அதன் இராணுவத்திற்கும் எதிராக, நமீபியா நாட்டு மக்கள் எப்பொழுது ஐரோப்பிய காலனித்துவ வாதிகள் அவர்கள் நாட்டை ஆக்கிரமித்தார்களோ, அப்போதிருந்து தமது மக்களின் விடுதலைக்காகப் போராடி வந்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களின் ஆரம்பக்கால விடுதலைப் போராட்டம் முழுமைப் படுத்தப்படவில்லை. அதற்காக எவ்வித அரசியல் அமைப்புக்களும் தோற்றுவிக்கப் படவில்லை.

அவ்விதத்தில் 1960ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19ம் திகதி, தென் மேற்கு ஆபிரிக்கா மக்கள் அமைப்பைத் தோற்றுவித்தனர். இத்தகைய நமீபியா மக்களில் அரசியல் அமைப்பை ஆரம்பத்திலே தென் ஆபிரிக்கா அரசு முறியடிக்க முனைந்தபோதிலும், இவ்வமைப்பு 1960இன் நடுப்பகுதிகளில் நமீபியா நாடுமுழுவதும் வளரலாயிற்று. இத்தகைய நமீபியா நாட்டுமக்களின் விடுதலைப் போராட்ட அமைப்பை முறியடிக்கும் விதத்தில், தென் ஆபிரிக்க அரசு செயற்பட்ட பொழுது "Swapo" ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு "Swapo"வின் இராணுவப் பிரிவான "PLAN" ஐத் தோற்றுவித்தது. 1970இல் முற்பகுதியில் "Swapo". தமது மக்களின் விடுதலைக்காக அரசியல் இராணுவப் போர்த்தந்திரங்களையும், யுக்திகளையும் கைக்கொண்டு மிகத்தீவிரமாகத் தொடங்கலாயிற்று. 1974 இல் அங்கோலா மக்கள் போர்த்துகீச பாசிச அரசிடம் இருந்து விடுதலை பெற்றமை, நமீபியா நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மாறாக, தென் ஆபிரிக்க நிறவெறி அரசின் ஆக்கிரமிப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இந்நிலையில், தமது மக்களை அரசியல் மயப்படுத்தி, தமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு நமீபியா நாட்டு மக்கள் தள்ளப்பட்டனர்.

(12ம் பக்கம் பார்க்க)

### நியாயமான யுத்தம்

"தேசங்களை அடிமைப்படுத்துவதற்காக நடத்தப்படும் யுத்தங்கள் நியாயமான யுத்தங்கள் அல்ல. தேசங்களை விடுதலை செய்வதற்காக நடத்தப்படும் யுத்தங்கள் நியாயமான யுத்தங்களாகும். அந்நியரின் தாக்குதல்களில் இருந்தும் மக்களைக் காப்பாற்றுவதற்காகவோ, அல்லது முதலாளித்துவ அடிமை விலங்குகளை அறுத்து மக்களை விடுதலை செய்வதற்காகவோ, அல்லதுகடைசியாகஏகாதிபத்தியத்தியநுகத்தடியிலிருந்துஅடிமை நாடுகளையும், ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கு அடிபணிந்து கிடக்கும் நாடுகளையும் விடுதலை செய்வதற்காகவோ நடத்தப்படும் யுத்தங்கள் நியாயமான யுத்தங்களாகும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ சமூக விஞ்ஞானக் கல்லூரியில் தோழர் தா. பாண்டியன்...

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் நடாத்தப்படும் தமிழீழ சமூக விஞ்ஞானக் கல்லூரியில் மார்க்சிச லெனினிச அடிப்படைப் பாடத்திட்டத்தை முடித்து வெளியேறும் மாணவர் அணியின் ஒன்றுகூடல் வைபத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் அவர்களும், கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரனும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

**தோழர் தா. பாண்டியன் உரையாற்றுகையில்:-**

போர்க்கோலம் பூண்டிருக்கும் நீங்கள் ''உணர்வுகளால் உருவாக்கப்பட்ட கனவுகள் கலையாது அது நனவாக்கப்படும்'' என்று பெண் தோழர்கள் பாடியதைக் கேட்கும்போது குறிப்பாக இந்த தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும், கேட்கவைக்க ஒரு காலம் வராதா என்ற எண்ணமே வந்தது என்றார். அத்தோடு கற்கின்ற பாடங்கள் கடைபிடிக்கப்பட வேண்டும், வாழ்க்கை அனுபவத்தோடுமேலும் சுடர் தீட்டப்பட வேண்டும் என்றும், நாளைக்கு அமுல் படுத்துவதற்குரிய ஆயுதமாகத்தான் விளங்கப் பட்டுள்ளது என்பதையும் தெளிவுப்படுத்தினார்.

தமிழகத்தில் கூட இதைப்பற்றி முழு அளவில் உணர்ந்து உணர்வுபூர்வமான ஆதரவும், கொந்தளிப்பும் வந்துவிட்டதாக என்னால் சொல்லிவிட முடியாது. அதற்கான எம் பணி அதிகம் உண்டு. இதற்காக முழு நாடு தழுவிய அளவில் தமிழர்கள் பிரச்சினை என்பது வெறும் தமிழர்கள் பிரச்சினை அல்ல ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம் என்பதைத் தெளிவு படுத்த எல்லா மாநிலங்களின் தலைநகரங்களிலும்; கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்த ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதைவிட எமக்கு இன்னுமொரு பெரிய பொறுப்பு ஒன்று உண்டு. அதாவது உலக கம்யூனிச இயக்கத்தின் முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற்றுத்தர வேண்டிய வரலாற்றுக் கடமையை நாம் மறக்கவில்லை. ஆனால் அவைகளைப் பெற்றுத் தருவதில் நாம் முழுமையாக வெற்றிபெறவில்லையென்றாலும், இம்முயற்சியில் வெற்றிபெற்று முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்ற நல்ல செய்தியையும், முன்னிலும் கூடிய தோழமை உணர்வும், ஆதரவும் உலகளாவிய ரீதியில் உங்களுக்கு பெருகிக் கொண்டிருக்கின்றது என்பதையும், என்னால் உறுதியாகச் சொல்ல முடியும் என்றார். இறுதியாக தற்போது நடக்கும் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தி சிறிலங்கா இன்வாத அரசு ஆயுதங்களையும், பிற்போக்குச் சக்திகளின் ஆதரவையும், திரட்ட முயற்சிக்கிறது. அதேபோல் நீங்களும் அவர்களுக்கெதிரான அமைப்புகளைத் திரட்டி இவ் ஏகாதிபத்திய சக்திகளை முறியடிக்கத் தயாராக வேண்டும்.

எந்நேரத்திலும் நிட்சயமாகஎமது பங்கையாற்றத் தயாராக இருப்போம். மேலும் ஏகாதிபத்தியத்தின் தாக்கம் தாக்குப்பிடிக்க முடியாதிருக்குமானால் நாங்களும் உங்களோடுசேர்ந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இன்னும் பெரிய அளவில் இனவெறியை எதிர்த்துப் போராடுவதில் பங்காளர்களாவோம். அதுவும் வெறும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றுபவர்களாக அல்லாமல் ஆயுதமேந்துபவர்களாகவும், சக தோழர்களாகவும், பங்களிப்போமென மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

**தோழர் உமாமகேஸ்வரன் உரையாற்றுகையில்:-**

எமது கல்லூரியின் மூலம் பொதுவுடைமைத் தத்துவங்களையும், விஞ்ஞான அணுகுமுறைகளையும் கற்றுத் தந்திருக்கிறோம். ஆனால் இது அடிப்படையானதும், ஆரம்பப் பாடத்திட்டமும் என்பதை மறந்து யாவற்றையும் கற்றறிந்துவிட்டோம் என்று மமதை கொண்டு நடக்கக் கூடாது.

பொதுவுடமைத் தத்துவங்களை இளைஞராக இருக்கும்போது பேசுவது ஒரு நாகரிகமாகவும் இருந்து வந்ததை நாம் அறிவோம். ஏன் இலங்கையில் பொதுவுடமை பேசி வந்தவர்கள்கூட இனவாதத்தால் கவர்ந்திழுக்கப்பட்டிருந்தனர் என்பதை நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. இவர்கள் பாராளுமன்ற கதிரைக்காக இனவாதத்தில் மூழ்கியதால் இன்று சிறிலங்காவிலுள்ள மற்றைய முற்போக்குச் சக்திகள்கூட முதலாளித்துவத்தால் இறுக்கமாய் கட்டப்பட்டிருக்கும் நிலையை உடைத்து தொழிலாளவர்க்கத்தின் போராட்டத்தை முன்னெடுக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதை நாம் எமது அடிமனதில் பதித்து வைத்திருக்க வேண்டுமெனவும், இது எமக்கு ஒரு பாடமாகவும் இருக்க வேண்டும் என்றார். வெறும்

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அக்டோபர் புரட்சி......

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

லாளித்துவத்தின் தவிர்க்க முடியாத வீழ்ச்சி பற்றியும், ஆட்சி அதிகாரத்தை உழைக்கும் மக்கள் கைப்பற்றி சுரண்டலற்ற கம்யூனிசத்தை அமைக்க உள்ளமை பற்றியும் விஞ்ஞான பூர்வமாக நிறுவினார்.

உலகின் பாட்டாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினதும் அமைப்புகளுக்கு வரலாற்றின் இயங்கும் திசைகளை கண்டு தெளியவும், அதனை அடியொற்றி முன்னணி வர்க்கங்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் தேசிய, சர்வதேசிய ரீதியாக ஐக்கியப்படுத்தி போராட்டத்திற்கு அணிதிரட்டவும் போராட்டத்தின் மூலஉபாயம் தந்திரோபாயங்களை வகுக்கவும், வரலாற்றை மாற்றி அமைத்து தமது ஆட்சி அதிகாரத்தை ஸ்தாபிக்கவும் மாக்சிய சித்தாந்தம் வலியதொரு தத்துவார்த்த ஆயுதமாக வாய்த்தது.

மானிட வரலாற்றின் பொதுமைகளிலும், தனித்தன்மைகளிலும் இருந்தும், அவற்றின் இயங்கியல் போக்கிலிருந்தும் கார்ல்மாக்ஸ் அவர்கள் கண்டறிந்த பொது விதிகளைக் கொண்ட மாக்சிய தத்துவத்தை, ரூசியாவின் புரட்சியினதும் ஜார் மன்னனால் ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்களின் விடுதலை போராட்டத்தினதும் கோரிக்கைகளை எதிர்நோக்கத்தக்க வகையில் அக்டோபர் புரட்சி வளர்த்தெடுத்தது. இந்த வகையில் தோழர் லெனின் ஆற்றிய பணி சிறப்பு வாய்ந்ததாகும்.

அக்டோபர் புரட்சியின் நினைவு, அது தன்னளவில் உலக வரலாற்றுக்கும் புரட்சிக்கும் ஆற்றிய பங்களிப்பினால் மட்டுமன்றி, மாக்சிய சித்தாந்தத்தின் நடைமுறை சார்ந்த வளர்ச்சிக்கு அடிகோலிய வகையிலும்கூட நம்மைப் பொறுத்தும், நமது சர்வதேச நண்பர்களைப் பொறுத்தும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அக்டோபர் புரட்சியை வெறுமனே 1917ம் ஆண்டு அக்டோபர் மாதம் நிகழ்ச்சிகளாகக் குறுக்கிப் பார்க்க நாம் தயாராக இல்லை. சம்பிரதாயத்துக்காக அக்டோபர் புரட்சியை கொண்டாடுபவர்கள் வேண்டுமானால் அப்படிப் பார்க்கட்டும். வரலாற்றை மாற்றும் நோக்கத்துடன் அணிதிரண்டிருக்கும் எமது பார்வை அவர்களது பார்வையில் இருந்தும் மாறுபட்டதாகும்.

முன்னணி மக்கள் பிரிவினரது சக்தியையும், ஒன்று திரட்டி நெறிப்படுத்திய போல்சேவிக் கட்சியின் வரலாற்று சாதனையாக அக்டோபர் புரட்சியை நாம் மதிப்பிடுகின்றோம்.

அக்டோபர் புரட்சியை மகத்தான மனிதர்களின் அற்புதச் சாதனையாக நோக்கும் கற்பனாவாதப் பார்வையை நாம் நிராகரிக்கின்றோம். வரலாற்றை மகத்தான மனிதர்கள் உருவாக்குவதாகக் கருதும் மாக்சிய விரோதப் பார்வை சுரண்டும் வர்க்கத்துக்குரியதாகும். பரந்துபட்ட

> ''மார்க்ஸிஸ்டுகள் உண்மையான வாழ்க்கையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஸ்தூலமான யதார்த்தங்களைப் பார்க்க வேண்டும். நேற்றைய தத்துவத்தை பிடித்துக் கொண்டு விடாமல் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது இந்த மறுக்க முடியாத உண்மையை உணர்வது தான் முக்கியம்''.
>
> ''லெனின்''

முழு மானிட வரலாற்றின் பின்னணியில் வைத்தும் முழு ரூசியாவின்: ஜாரினால் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் வரலாற்றுப் பின்னணியில் வைத்தும் நாம் அக்டோபர் புரட்சியை மதிப்பிடுகின்றோம்.

1860 களில் பிரிட்டிசாரால் கிரிமிய போரில் தோற்கடிக்கப்பட்டு பலவீனப்பட்ட ஜார் அரசை, பண்ணை அடிமை முறையை நீக்கும் வகையில் பணிய வைத்த விவசாயிகளது சக்தியையும், அதன் பின்னர் துரிதமாக உருவாகி தொழிற்துறை சீர்திருத்தங்களுக்காக போராடுவதோடு திருப்திப்பட்டுவிடாமல் ஆட்சி அதிகாரத்துக்காக மாக்சிய லெனினிச பாதையில் ஸ்தாபனப்பட்டு போராடிய தொழிலாளர்களது சக்தியையும், குறுகிய தேசியவாதத்துக்குள் கட்டுப்படாமல் பரஸ்பரம் புரட்சியையும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்த சகல தேசிய இனங்களையும் சார்ந்த

மக்களது சக்தியையும் பரந்துபட்ட மக்கள் ஸ்தாபனங்களது சக்தியையும் கொச்சைப்படுத்துவதே இத்தகைய பார்வையின் நோக்கமாகும்.

ஜி.வி. பிளெகெனவ் என்ற மாக்சிய தத்துவவாதி ரூசியாவில் மாக்சிய தத்துவத்தைப் பரப்பிய போதும், பின்னர் அவர் ரூசிய தொழிலாளிவர்க்க இயக்கமான, தொழிலாளர் விடுதலைக்குழுவை, 1883ல் ஸ்தாபித்தபோதும் ரூசிய வரலாற்றின் புதிய காலக்கட்டம் உருவாகியது.

ரூசியாவில் முடியாட்சியை வீழ்த்துவதற்கு விவசாயிகள், தொழிலாளர்களது கிளர்ச்சிகளை பயன்படுத்துவதுபற்றி பலர் ஆர்வம் கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்கள் தொழிலாளர்கள். விவசாயிகளுடனும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் முன்னணி பகுதியினருடனும் சேர்ந்து, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதை ஏற்றுக்கொள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளத் தயாரில்லை. இந்த வகை சோசலிஸ்டுகளுக்கு, ஆட்சிக்கலை மேலோரது விடயமாகும். இத்தகையவர்களை நாமும் அறிவோம். நமது போராட்டங்களை ஆதாயப்படுத்தி, உழைக்கும் மக்களின் இரத்தத்திலும், கண்ணீரிலும், தியாகங்களினும் அரசியல் வியாபாரம் செய்து மணிமுடிகளை சுவீகரித்துக் கொள்ளவிரும்பும் ஒரு கூட்டம் எல்லா விடுதலைப் போராட்டங்களிலுமே இருந்து வந்துள்ளது.

ரூசியாவில் இத்தகைய போக்குகளை வெளிக்காட்டிய நரோத்னிக்குகளையும், பொருளாதாரவாதிகளையும், சமூகஜனநாயகவாதிகள் ஆரம்ப நாட்களிலேயே எதிர்கொள்ள நேர்ந்தது.

நரோத்னிக்குகள் வரலாற்றின் யதார்த்தமாகயிருந்த முதலாளித்துவ வளர்ச்சியை அது அவசியமா அவசியமில்லையா என்கிற வகையில்—பட்டிமன்ற பாணியில் ஆராய்ந்தனர். இத்தகைய கற்பனாவாத சிறுபிள்ளைப் பார்வையை பெற்றிருந்த நரோத்னிக்குகள், தொழிலாளிவர்க்கத்தின் உருவாக்கம் பற்றியும் வரலாற்றில் அதனுடைய தலைமைப் பாத்திரம் பற்றியும் எதிர்க்கருத்துக்களைக் கொண்டிருந்ததும் புரிந்து கொள்ளக்கூடியதே.

விவசாயிகளை மையப்படுத்திய தத்துவத்தை உருவாக்க முனைந்த அவர்கள் ரூசிய விவசாயிகள் பற்றிய விஞ்ஞான பூர்வமான அறிவை ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. பரந்துபட்ட ரூசிய விவசாயிகள் இவர்களது பக்கத்தில் என்றும் நிற்கவுமில்லை. இதனால் இவர்கள் வரலாற்றை **வீரர்கள் உருவாக்குவதாகவும், மக்கள் வெறும் மந்தைக் கூட்டங்கள் என்றும், புரட்சி வெறும் தனி மனித பயங்கரவாத நிகழ்ச்சிகளினதும் சதிகளினதும் தொகுப்புகள் எனவும், புரிந்து கொள்ள முற்பட்டனர்.**

பொருளாதார வாதிகளோ, தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டத்துடன் நிறுத்திக் கொள்ளவேண்டும் என ஆட்சி அதிகாரங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் கோடு கிழித்தனர்.

இத்தகைய போக்குகளை ஆரம்பத்தில் எதிர்நோக்கி முறியடித்த பிளெகெனவ், நரோத்னிக்குகளது விவசாயிகள் முதன்மைவாதத்தை முறியடிப்பதற்கான தனது தத்துவப் போராட்டத்தில், வரலாற்றில் விவசாயிகளினது பாத்திரத்தைக் கருத்தில் கொள்ளாமை, என்கிற மாபெரும் தவற்றை செய்திருந்தார்.

பல புரட்சிகளின் தலைவர்களில் பலர், அமைந்திருக்கவில்லை. போல்சேவிக்குகளது பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாடும், தொழிலாளர்கள் விவசாயிகளது கூட்டணி பற்றிய கோட்பாடும், படையாட்கள் தொடர்பான ரூசியாவின் விசேட நிலைமைகளை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொண்டமையும். அக்டோபர் புரட்சிக்கு இட்டுச் சென்ற பல்துறை வெற்றிகளை அவர்கள் ஈட்டிக் கொள்வதை சாத்தியமாக்கிற்று.

1905ம் ஆண்டுக் கிளர்ச்சியின் தோல்வியில் இருந்து கற்றுக்

> **ஒரு கட்சியானது குறிப்பாக பாட்டாளிகளோடும், அரை குறை பாட்டாளிகளோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்கும், தன்னை இணைத்துக்கொள்வதற்கும், இரண்டறக் கலப்பதற்கும் ஆற்றல் படைத்திருக்குமேயானால் அந்தக் கட்சியை யாராலும் வெல்லமுடியாது.**
>
> — லெனின்

1895ல் மாக்சிய பிரசாரக் குழுக்களைத் திரட்டி தொழிலாள வர்க்கத்தின் சமூகஜனநாயக் கட்சியை கட்டி எழுப்புவதில் தோழர் லெனின் தீவிரமாக ஈடுபட்டார். 1898ல் கூடிய ரூசிய சமூக, ஜனநாயக தொழிற்கட்சியின் முதலாவது காங்கிரஸ் இந்த வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். பிரசாரக் குழுக்களாக, முன்னோடிப் பணிகளை மேற்கொண்டிருந்த மாக்சிய குழுக்களை, ஒருங்கிணைத்தமை, புரட்சிகரமான தொழிலாள வர்க்கத்தின் கட்சியை கட்டும் பணியில் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும் 1898ல் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் தொடர்பாக ரூசிய பேரினவாதத்தின் அதிதீவிர இடதுசாரிவடிவம் உட்பட, சகல வடிவங்களையும் தோழர் லெனின் மோதித் தகர்த்தெறிந்தார். தேசிய இனங்கள் தொடர்பாக தோழர் லெனின் அளவுக்குத்தீவிரமான சர்வதேசியவாதியாக பின்னர் இடம் பெற்ற

கொண்டமை உட்பட, வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்வது தொடர்பாக போல்சேவிக்களுக்கு இருந்த வல்லமையையும், நாம் அக்டோபர் புரட்சித்தினத்தில் நினைவுகூருவது அவசியமாகும்.

நமது வரலாற்றின் 'சுகலவெற்றி' தோல்விகளில் இருந்து கற்றுக் கொள்ளாத ஒரு அமைப்பு வரலாற்றைமாற்றும் பலத்தையும், கோட்பாடுகளையும் பெற்றுக் கொள்வதில்லை.

அக்டோபர் புரட்சியின் முக்கியமானதும் நாம் கவனிக்க வேண்டியதுமான மற்றொரு விடயம், போல்சேவிக்குகள் காட்டிய புரட்சிகரமான அரசியல் நேர்மையாகும். அவர்கள் தொழிலாளி வர்க்கத்துக்கும், புரட்சிகர விவசாயிகளுக்கும், ஒடுக்கப்பட்ட தேசியஇனங்களின் முன்னணிப் பிரிவினருக்கும், தமது சர்வதேச நட்பு அணிகளுக்கும், அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சிகரமான வகையில் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருந்தனர். இதனாலேயே அவர்களால் அக்டோபர் புரட்சிவரை முன்னேறி வருதலும், அக்டோபர் புரட்சியை வென்றிடுதலும் சாத்தியமாயிற்று.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தினூடாக சோசலிசத்தை அடையும் நோக்கத்துடன் இயங்கும் நமக்கு, அக்டோபர் புரட்சியின் தத்துவமும் நடைமுறையும் ஒரு சிறந்த புத்தகமாக, நல்லாசானாக வாய்த்துள்ளது.

நமது விடுதலைக்கும் புரட்சிக்குமான மார்க்கங்களை நாமே கண்டு கொள்வதற்கும், நமது விடுதலைப் போராட்டத்தினதும் புரட்சியினதும் கோரிக்கைகளையும், சாவால்களையும்—தத்துவம் நடைமுறை போன்ற சகல அம்சங்களிலும்-நாமே எதிர்கொள்வதற்கும், அக்டோபர் புரட்சியின் அனுபவங்கள் நமக்கு கை கொடுத்து வருகின்றது.

அப்பழுக்கில்லாத சர்வதேசிய உணர்வுடனும், போக்குமை மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புடனும் விடுதலையையும் நீதியுடன் கூடிய சமாதானத்தையும் சமத்துவத்தையும் நமது தாய்நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் வழி நின்று தேசிய இன விடுதலைக்கு நாம் போராடி வருகின்றோம்.

தேசிய இன விடுதலையின் வெற்றியிலிருந்து சோசலிசத்துக்கு என்பதே நமது போராட்டத்தின் கோசமாக அமைந்துள்ளது.

சமகாலத்தில் நடந்து வரும் நமது போராட்டமும் 1917ல் நடந்து முடிந்த அக்டோபர் புரட்சியும் மாறுபட்ட காலம், சர்வதேச பின்னணி, சமூக பொருளாதார பின்னணிகளை கொண்டுள்ளமை தொடர்பாகவும், பல்வேறு மாறுபட்ட தன்மைகளையும் காலக்கட்டங்களையும் கொண்டுள்ளதை நாம் உணர்ந்தேயுள்ளோம். எனினும் 68 வருடங்களின் பின்னரும் கூட நமது போராட்டத்துக்கு பொதுப்பட்ட வழிகாட்டல்களை செய்யத்தக்க சீரிளமை வாய்ந்ததாக உயிரோட்டத்துடன் அக்டோபர் புரட்சி அமைந்திருப்பதையும் நாம் மறந்துவிடவில்லை.

நமது கடந்த காலங்களை மீழ் பரிசீலனை செய்து கொள்வதற்கும் நமது எதிர்காலத்தை விஞ்ஞான ரீதியாக வரையறுத்துக் கொள்வதற்கும் அக்டோபர் புரட்சியின் 68வது நினைவு தினத்தை நாம் வாய்ப்பாக்கிக் கொள்ளவேண்டும். ★

## சதியின் பிடியில் சிக்கிய . . .

தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. தருமலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோர் கடந்த 3.9.85ல் கடத்திச் சென்று கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

திரு. தருமலிங்கம் இலங்கை — சோவியத் நட்புறவுக்கழகத்தின் உபதலைவராகவும், வடபகுதியில் இலங்கை—சோவியத் நட்புறவுக் கழகத்தின் தலைவராகவும், சிறிலங்கா சமாதான சபை, மற்றும் ஆசிய — ஆபிரிக்க ஒற்றுமைக் கழகத்தின் முக்கிய உறுப்பினரில் ஒருவராகவும் பணியாற்றியவர் என்பதும் தனது வாழ்க்கையின் இறுதிக்காலம் வரையும் தமிழ் மக்களின் வாழ்வுக்காக உழைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் இக்கட்டான சூழ்நிலையில் இவர்கள் கொலை செய்யப்பட்டதை ஆழமாக நாம் ஆராய்ந்து பார்க்கையில்; சர்வதேசச் சதிக்காரக் கும்பலில் இருந்து இன்று தமிழீழ விடுதலை வேண்டி போராடும் இயக்கங்கள் வரையும் சங்கிலித்தொடர் போன்ற இறுக்கமான பிணைப்பு இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இது போன்ற படுபிற்போக்குத்தனமான நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

## விடுதலை பெற்ற விடுதலை வீரர்கள்

விடுதலைப் பயிருக்கு உரமாய் இருந்து விழிப்பூட்டிய எம் விடுதலை மறவர்கள் தமக்கென ஒரு வீரவரலாற்றைப் படைத்துக் கொண்டனர்.

இம் மறவர்களை இழந்து ஏங்கும் குடும்பத்தாரோடு தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும் தமது வீரவணக்கத்தை செலுத்துகிறது.

★ தோழர் சத்தியநாதன்-சின்னத்தம்பி
புன்னாலைக் கட்டுவன் (குஞ்சு)
இறப்பு: 29-8-85 பிறப்பு: 25-11-1964

★ தோழர் ராஜேந்திரராஜா-நீதிராஜ் (கிறிஸ்டி)
திருகோணமலை.

★ தோழர் மகேந்திரன்-நடராசா
கிளிநொச்சி, இறப்பு: 31-8-85

★ தோழர் கணேசன் (வாலி)
மூதூர். இறப்பு: 14-9-85

★ தோழர் நாகேந்திரம்
மூதூர். இறப்பு: 14-9-85

★ தோழர் தவராசா
மூதூர். இறப்பு: 14-9-85

★ தோழர் சந்திரகுலசிங்கம் (சேகர்)
நயினாமடு இறப்பு: 12-10-85

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சமூகவிஞ்ஞானக்...

(5ம் பக்கத்தொடர்ச்சி)

இனவாத உணர்ச்சிகளை ஊட்டி எமது போராட்டத்தை முன்னெடுத்தால் அதிலிருந்து மீளமுடியாமல் இறுதியில் தொழிலாள வர்க்கத்துக்கு துரோகிகளாக மாறுவது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியேயாகும். நிலம் மட்டும் விடுதலை பெற்றால் அது விடுதலையாகிவிடாது. மக்களுடைய அடிப்படை வர்க்க உணர்வுகளும் சாதிவேறுபாடுகள், பெண்ணடிமைத்தனங்கள், மற்றும் மத வேறுபாட்டுப் பூசல்கள் அனைத்தும் களைந்து மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்குக் காணும் தீர்வே முழுமையான விடுதலையாகும் என்றார்.

இவ்வெண்ணங்கள் நம்மக்களின் மனதில் பதிந்த எண்ணங்களாகும். தற்போது எதிரி எம்மைவிட பலமுள்ளவனாக இருப்பதில் இவ்வெண்ணங்களை வெளிக்காட்டாமல் மக்களில் பலர் வாழ்கிறார்கள். ஆனால் நாமோ இக்கல்லூரியில் கற்றவற்றை ஆயுதமாகக் கொண்டு எமது மக்களிடம் உள்ள தப்பெண்ணங்களை வெட்டிவீழ்த்தி புதிய மனிதநேயம் கொண்ட சமுதாயத்தைக் கட்டியமைக்கத்தவறுவோமேயானால் இங்கு படித்த கல்வியினால் எந்தவித பயனுமில்லாமல் போய் விடும். நம் நாட்டின் பல்கலைக்சழகமே இதற்கு உதாரணமாகும். அங்குள்ள மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் போன்றோர் பொதுவுடமைக் கட்சியையோ, சோசலிசக் கட்சியையோ சார்ந்தவர்களாகவும், முற்போக்காளர்களாகவும், செயற்பட்டு வந்தனர். பல்கலைக்கழக பட்டம்பெற்று வெளியேறி மக்களை அணுகும் போது பொதுவுடமைத் தத்துவ வாழ்க்கை முறையை மறந்து எந்த மக்களை பற்றி இவ்வளவு நாளும் பேசினார்களோ, அம்மக்களையே சுரண்டித் தன்னலத்திற்காக தனிச்சொத்துடமையாளர்கள் ஆனதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இதை அடிமனதில் வைத்துச் செயற்பட்டால் தான் குறைந்தது ஒருபடியாவது முன்னேறி இன்று முழு உலகையும் இறுக்கும், முதலாளித்துவத்திற்கு ஒரு முடிவுகட்ட முடியும்.

இம்முதலாளித்துவம் எந்த மூலையில் நொறுக்கப்பட்டாலும். அது எமது வெற்றியாகக் கருத வேண்டும். நாளை தமிழீழ மக்களுடைய வெற்றி சிறிலங்காவில் வாழ்கின்ற தொழிலாளிகளின் வெற்றியாகவும், உலகெங்கும் வாழும் சுரண்டப்படும் தொழிலாளர்களின் வெற்றியாகவும் கருதப்படவேண்டும். இங்கு அடிப்படையைக் கல்வியை முறையாகக் கற்றிருக்கும் நீங்கள் கல்லூரியைவிட்டு வெளியேறிய பின்பு மக்களுடன் இணைந்து மக்களுடைய பிரச்சினைகளுக்கு நேரடியாக முகம் கொடுப்பதன் மூலம் கடந்த காலத்தில் சாதி, மத, வர்க்கவெறியர்களால் ஒடுக்கப்பட்ட, அன்றி அதிருப்தியுற்ற மக்களை மீண்டும் ஒருங்கிணைப்பதன்மூலமே தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவமுடியும் என்றார். ★

---

## விடுதலைப் போராட்டத்தில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேகமாகவே செயற்பட்டு வந்தனர். மேரிலஸ் ஸெரானோ உளவுத்துறை வீராங்கனையாகச் செயற்பட்டு வந்தபோது 1982ல் பாஸ்டோரராவின் படைகளால் கைதுசெய்யப்படுகிறாள் அங்கு அமெரிக்காவின் சதி ஸ்தாபனமாகிய C. I. A.யினரதும் ஒடுக்குமுறையாளன் பாஸ்டோராவினதும்சித்திரவதைகட்கு அளவேயில்லை. அதில் இருந்து அவன் தப்பி வந்து பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் நான் போராட்டக்களத்தில் ஒரு போராளியாக இருப்பேன், ஒலி பதிப்புக் கருவி (Wireles) இயக்குவேன், போராட்டம் குறைவான காலகட்டங்களில் போராட்டத்தில் காயமடைந்தவர்களுக்கு பணிவிடை செய்யும் செவிலியாகவும் இருப்பேன். ஆனால் பாஸ்டோராவின் கைக்கூலிகளால் கைது செய்யப்பட்டபோதே, முதல் முதல் தனிமையானேன். நித்திரையில் என்னை யறியாமலே ஏதாவது உளறி எமது இலட்சியத்திற்கு ஏதாவது பங்கம் ஏற்படுத்தி விடுவேனோ என்ற அச்சம் என்னைப் பீடித்திருந்தது. இதனால் இரவில் நித்திரை கொள்ளாமலே இருந்தேன் என்றாள். தனக்கு கிடைத்த சித்திரவதையை தனது இலட்சியத்தோடு ஒப்பிடுகையில் சர்வ சாதாரணமாகவே இருந்தது என்றும், போராட்டம் எனக்கு துணிச்சலைக் கற்றுத்தந்தது போல இச்சிறை வாழ்க்கையும் சித்திரவதையும் பொறுமையை கற்றுத்தந்தது என்றாள்.

நிக்கரகுவா பெண் போராளிகளுக்கு அவர்களை செல்வி என்று அழைப்பது விருப்பமில்லை இவர்கள் ஒருவரை ஒருவர் தோழர் என்றே அழைத்துக் கொள்கிறார்கள். அதில் அலாதி மகிழ்ச்சியுமடைகிறார்கள். மற்றய பெண்களைப் போல மேரிலஸ் ஸெரானோவும் கணவன், பிள்ளைகளோடு அமைதியாக வாழ ஆசைப்பட்டவள்தான். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் கைக்கூலியான சோமோசாவின் ஆட்சியும் நிலைக்குமட்டும் நிக்கரகுவா மக்கள் சுதந்திரமாகவோ அன்றி பெண்கள், சமுதாயத்தில் பெண்களுக்குரிய உரிமைகளோடோ வாழமுடியாது என்பதை உணர்ந்தாள். இதன் விளைவாகவே போராட்டத்திலும் இறங்கினாள். மேரிலஸ் ஸெரானோ மட்டுமல்ல ஆயிரமாயிரம் பெண்கள் களத்தில் குதித்தார்கள். இதன் விளைவோ இன்று நிக்கரகுவா அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சவாலாக வெற்றி நடைபோடுகிறது.

இதுபோலவே அமெரிக்க நிர்வாகத்தின் கைகூலியான ஜே ஆரின் இனவாத அரசுக்கெதிராக போராடி தமிழீழ ஜனநாயகக் குடியரசை அமைக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியில் தமிழீழப் பெண்களும் ஒரு மேரிலஸ்ஸெரானோவாகவோ, அன்றி வின்னி மண்டேலாவாகவோ, அல்பேட்டினா சிசுலுவாகவே மாறுவதன் மூலமே பெண்கள் விடுதலையோடு கூடிய தமிழீழ மக்கள் விடுதலையை வென்றெடுக்க முடியும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜெயவர்த்தனபுரவில் ஜெயவர்த்தனாவின் காடைத்தனம்

1948ம் ஆண்டு இலங்கைக்கு பிரிட்டிசாரிடம் இருந்து விடுதலை கிடைத்தபோது முதலாளித்துவ சக்திகள் ஆட்சியைத் தமக்குச் சார்பாக்கிக் கொண்டனர். இவர்கள் தமது ஆட்சியையும், வர்க்க நலன்களையும் காப்பாற்றும் பொருட்டு ஆழமாகத் திட்டமிடப்பட்ட அடிப்படையில் தமது சுரண்டல் நடவடிக்கைகளையும், ஒடுக்கல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தொடங்கினர். இந்நடவடிக்கையைப் பரவலாக நடைமுறைப்படுத்தமுடியாத நிலை அந்நேரம் இருந்தது. காரணம் தமிழ்—சிங்கள முற்போக்கு சக்திகளுக்குள் போதுமான உறவுகள் நிலவிவந்ததேயாகும். இம் முற்போக்கான உறவுகள் ஒரு வளர்ச்சிக் காலகட்டத்தில் தமது வர்க்கத்திற்கும் தமது ஆட்சிக்கும் பொறிக்கிடங்கு அமைத்து அதனுள் தம்மை வீழ்த்தும் என்பதை இம்முதலாளித்துவ சக்திகள் நன்கு உணர்ந்திருந்தனர்.

இதிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள; தமது சதித்திட்டத்தை மக்கள் உணராமல் இருக்கக்கூடியதும், அதே வேளை மக்கள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கக் கூடியதுமான ஆயுதத்தைக்கையில் எடுத்தனர். அதாவது தேசிய இன அடிப்படையான கோஷங்களை முன்வைத்தனர். உதாரணமாக இலங்கை ஒரு சிங்கள நாடு; அது சிங்களவருக்கே உரியது என்ற வகுப்பு வாதத்தை உருவாக்கிக் குறுகிய அரசியல் லாபம் தேடும் நோக்கில் தமிழ் மக்களின் பொருளாதார, கல்வி வசதிகளை முடக்கத் தொடங்கினர். இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில் இடதுசாரிகள் தத்தம் பங்குகளை முதலாளித்துவ அரசிற்குச் செய்துவந்தனர். இதனால் இடதுசாரி சக்திகளுக்கிடையே நிலவிவந்த உறவும் முறிவடைந்தது.

ஆரம்பத்தில் பொருளாதார ரீதியான அடிப்படைத் தடைகளைப் போட்டுவந்தனர். இறுதியில்முழுமையாக ஒடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது, கல்வியில் தடை போடத் தொடங்கினர். இவ் ஒடுக்குமுறைக்கு அடிபணியாத மாணவர்கள் கிளர்ந்தெழுந்த எழுச்சியே இன்றைய எமது போராட்டத்திற்கு அத்திவாரமாக அமைந்தது என்பதே வரலாறாகும். இதற்கு முதல் போடப்பட்ட ஒவ்வொரு தடைகளின்போதும் தமிழ் வலதுசாரி முதலாளித்துவ சக்திகளால் அப்போராட்ட முனைப்புகள் மழுங்கடிக்கப்பட்டது. ஆனால் கல்வித்தடையால் ஏற்பட்ட முனைப்பை அவர்களால் மழுங்கடிக்க முடியவில்லை. கல்வித்தடையின்மூலம், இளைஞர்கள் தமக்கு எதிர்காலத்தில் வரப்போகும் ஆபத்தை இனங்காணக்கூடிய நிலைக்கு வந்தனர். அதாவது எமது பிரச்சனையில் அடிப்படை உண்மையை நாமே தெளிவாக உணர்ந்ததாலும், அதற்கு உரிய வடிவம் கொடுத்ததாலும் இதுவரை சிங்கள இனவாத அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுத்து தம் குறுகிய அரசியல் லாபம் தேடிய தமிழ் வலதுசாரிசக்திகள் தூக்கி எறியப்பட்டனர். தமிழ் மக்களின் போராட்டம் என்பது இனவாத அரசால் ஒடுக்கப்பட்ட, உரிமைகளையும் பிரதேசங்களையும் இழந்த மக்களுக்கான போராட்டமாக வடிவத்தில் மாற்றம் ஏற்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைக்கான இப்போராட்டம் உச்சக்கட்டம் அடைந்துவிட்ட இவ்வேளை சிங்கள சிறிலங்காவிலும் ஒரு மாற்றத்திற்குரிய மனோபாவம் உருவாகுவது தவிர்க்க முடியாததே. சிறிலங்காவிலும் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடும். அனாகரிகமான போராட்டத்தின் குணாம்சத்தை உணரவேண்டிய நிலைக்கு அம்மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். காரணம் ஏகபோக பொருளாதாரத் திட்டத்தின் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் அம்மக்களும் விதிவிலக்கானவர்களல்லர். அத்தோடு இடதுசாரி சக்திகள்; தொழிற்சங்கங்களுக்குச் செய்த துரோகங்களும், சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மை நிலையை அடைந்ததும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஏதோ ஒரு வகையில் இனவாதப் போர்வைக்குள் கௌரவமாக சிங்களமக்களைத் திசை திருப்பிவந்தாலும் தொடர்ந்து நீடிக்காதென்பதை அண்மைக்காலத் தமிழ் பேசும் மக்களின் வரலாறுகள் காட்டியுள்ளது.

இவ்வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு சிங்கள மக்களின் பிரச்சனையை நாம் பார்க்கையில் அண்மையில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவருக்கெதிரான U.N.P. குண்டர்களின் வன்செயல்கள், திட்டமிட்டு மாணவர்களை ஒடுக்குவதற்காக U.N.P. அரசால் நடத்தப்பட்ட அனாகரீக நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த காலங்களில் நடந்த தவறுகளில் இருந்து தம்மை நெறிப்படுத்தி ஒரு தெளிவான கண்ணோட்டத்துடன் இப் போராட்டம் அணுகப்படுமானால், எப்படி மாணவர் போராட்டம் தமிழீழப் போராட்டத்திற்கு அத்திவாரமாக அமைந்ததோ அதுபோலவே சிறிலங்காவிலும் மாணவர்களின் எழுச்சியானது அங்கும் முற்போக்கு சக்திகளில் தொழிற்பாட்டிற்கு ஒரு வழிகோலி சிங்கள மக்களின் சுபீட்சமான சமாதானமான வாழ்விற்கு வழி வகுக்கும் என்பது உறுதி.

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வன்செயல்கள் தொடர்பாக ''இளைஞர் சமத்துவவாதிகள்'' அமைப்பு வெளியிட்ட துண்டறிக்கையில் ஒரு பகுதி:

பல்கலைக் கழககங்களுக்குள் நுளைந்து மாணவர்களைக் கொலை செய்யும் ஐக்கிய தேசிய கட்சியின் அண்மைக்கால நடவடிக்கைகள் மிகவும் அபாயகரமானது என்றும் இவ் அடாவடித்தனங்களை அடித்து நொருக்குவதற்குச் சகலமாணவர்களையும், இளைஞர்களையும், மற்றும் தொழிலாளி-பாட்டாளி மக்களையும் ஒன்றுசேருமாறு ''இளைஞர் சமத்துவவாதிகள்'' என்னும் ஒரு அமைப்பு தமது துண்டுப்பிரசுர அறிக்கைமூலம் கோரியுள்ளது.

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நடந்த குண்டர்களின் தாக்குதல்களை ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மட்டக் குழுக்களே திட்டமிட்டு நடத்தினர் என்பதை தற்போது நாம் அறிவோம். அத்தோடு எதிர் புரட்சிகர வலதுசாரி சக்திகளின் கபடத்தன்மையும் தெரிய வந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் தலைவன் லக்ஸ்மணனுக்கு எதிராக ஆத்திரமூட்டக் கூடிய வகையில் மிகவும் பயங்கரமான தாக்குதல்களை நடத்தினார்கள். இதை அறிந்த பல்கலைக்கழக மாணவர்கள் விரைந்து சென்று காப்பாற்றியிருக்காவிட்டால் வீரசூரியா, ரோகணரத்நாயக்கா, பத்மசிறி போன்றவர்களின் மரணப்பட்டியலில் லக்ஸ்மணனும் இடம் பெற்றிருப்பான். செப். 20ம் தேதி காலை செய்யப்பட்ட இக்கொலை முயற்சிக்கு முன்னர்; மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குச் செல்லும் வழியில் அசிட் திராவகத்தை ஊற்றியும், வாளால் வெட்டிக் கொல்வதற்கும் ஐ. தே. கட்சியின் குண்டர் அமைப்பின் மிக முக்கியமானவரும் பல்கலைக்கழகத்தில் உயர்மட்ட பதவி வகிப்பவருமான ஒரு அதிகாரியின் வீட்டிலேயே வைத்து திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இக்கொலை முயற்சியில் சம்பந்பட்ட ஜெயதிலகா, அஜீத் என்ற ஐதே கட்சி மாணவர் தலைவர் இருவர் மீது குற்றம் சாட்டியும், அவர்களுக்கெதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்பிரச்சனையோடு பல்கலைக்கழகத்தை மூடிவிட்டு மாணவர் விடுதிக்குள் புகுந்த காடையர் மாணவர்களின் உடமைகளைக் கொள்ளையிட்டும், பெரும் பாலான புத்தகங்களையும் குறிப்புக் கொப்பிகளையும் தீயிட்டுக் கொளுத்தியும் நாசமாக்கினர்.

பின்னர் மாணவரும் விரிவுரையாளரும் சேர்ந்து பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பிரிவைச் சோதனையிட்டபோது கத்தி, கைத்துப்பாக்கி, வாள் கிறீஸ்கத்தி போன்றவற்றைக் கண்டெடுத்தனர். இதே தினத்தில் கத்திகள், கைத் துப்பாக்கிகள் சகிதம் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து அங்குள்ள மாணவர்கள் மீது ஐ.தே. கட்சி குண்டர்கள் தாக்கல் நடத்த முனைந்துள்ளார்கள்.

தற்போது வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடக்கும் மிருகத்தனமான தாக்குதல்களோடும், நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருவதும், பொலீஸ், இராணுவ தாக்கல்களோடும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்கையில ஐ.தே. கட்சியானது ஒரு இராணுவ ஆட்சியைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

ஐ.தே.கட்சி அரசைத் தூக்கி எறிந்து தொழிலாள வர்க்க அரசு ஒன்றை நிறுவுவதற்கான ஒருங்கிணைந்த கூட்டமைப்பில் செயல்படுவோம். தற்போது போராட்டத்திற்கு முன்வந்திருக்கும் தோட்டத் தொழிலாளர், வங்கி ஊழியர்கள், தாதிகள், விவசாயிகள், ஈழப்போராளிகள் உட்பட அனைத்துத் தொழிலாளி—பாட்டாளி மக்களும் ஒருங்கிணைந்து செயற்படக்கூடிய வழிமுறையானது எதிர்காலப் போராட்டத்தின் இறுதிவடிவமாகும் என அத் துண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

## தோழர் பாலசிங்கத்தை வரவேற்கிறோம்.

இந்தியாவில் இருந்து நாடுகடத்தப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் தோழர் பாலசிங்கம் மீண்டும் இந்தியா வர அனுமதிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

''தாக்கிவிட்டு ஓடிவிடும் கொரில்லாப்போர் நிறுத்தப்பட்டு முழுமையாக நேரடிப் போர் நடத்தப்படும். இராணுவத்தைச் சமாளிக்க எல்லாத் தமிழர்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கப்படும்.''

தோழர் பாலசிங்கம் 23-8 85 இல் தமிழகப் பத்திரிகைக்குக் கூறிய மேற்படி கருத்தையும் புதியபாதை வரவேற்கிறது.

தினமலர்-சென்னை (23-8-85)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கு!



இன்று தமிழீழத்தின் மக்களில் பாதிக்கு மேல் பெண்கள் உள்ளனர். ஆனால் இவர்கள் இன்னும் சமுதாயத்தின் அடித்தட்டிலேயே ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நாட்டின் பொருளாதார உற்பத்தியில் வகிக்கும் பங்கு மகத்தானது என்றே சொல்ல வேண்டும். ஆனால் சட்டரீதியாக உழைக்கும் மகளிருக்கான பல சட்டங்கள் இருந்தும், அவை அமுல் நடத்தப்படுவதில்லை. இன்று சிறிலங்காவை ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசு ஓர் முதலாளித்துவ அரசாகும். இதனிடம் இருந்து எதையும் எதிர்பார்ப்பது தவறாகும். முதலாளித்துவ அரசிடம் இருந்து எப்படி உரிமைகளைப் பெறுவதற்காக போராடுகிறோமோ, அதேபோல் பெண்களும் முற்போக்கு எண்ணம் கொண்ட தொழிற்சங்கங்கள் மூலமோ அன்றி மாதர் சங்கங்கள் மூலமோ தமது எதிர்கால லட்சியமாகிய பெண் விடுதலையையும், சமுதாய மாற்றத்தையும் அடித்தளமாகக் கொண்டு தேசிய விடுதலையை முன்னெடுக்க வேண்டும் ''சமுதாயப் பொருளுற்பத்தியில் பெண்கள் அதிக அளவில் ஈடுபட்டாலன்றி பெண்கள் ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவது சாத்தியமற்றது'' என்று லெனின் கூறியுள்ளார்.

எமது சமுதாய அமைப்பு முதலாளித்துவ சமுதாய அமைப்பு மட்டுமன்று, ஆண் ஆதிக்கமும் உள்ள சமுதாய அமைப்புமாகும். இவ் ஆண்களே எமது சகல பிரச்சனைக்கும் தீர்வு காண்பார்கள் என்ற மாயையில் தொடர்ந்தும் வாழ்ந்து, தேசிய இன விடுதலைப் போராட்டம் முடியும் நேரத்தில் மேலும் கட்டுமீறிய ஒடுக்குமுறைகளுக்குள் அகப்படாமல் இருக்கவேண்டுமாயின் ஆண்களின் ஒத்துழைப்பை பெறுவதோடு தமது ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் பெண்கள் கூடிய பங்குகளை எடுத்து செயற்பட வேண்டும்.

இதற்காக பாடசாலைகள், தொழிற்சாலைகள், மற்றும் சேவை உழைப்பில் ஈடுபடும் பெண்கள் அனைவரும் தத்தம் அணியினூடாக பெண் விடுதலையை கொச்சைப்படுத்தாமல் முற்போக்குத் தலைமையுடன் முன்னெடுக்க வேண்டும்.

இன்று உலகம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர கனவுகாணும் அமெரிக்காவின் நுழைவாயிலிலேயுள்ள நிக்கரகுவாவில் சர்வாதிகாரியான சோமோசாவின் ஆட்சியை எதிர்த்தும், அமெரிக்க நிர்வாகத்தின் அதிநவீன போர்க்கருவிகளுக்கு எதிராகவும் போராடியவர்களில் பெண்களின் பங்கு மேன்மையானதாகும்.

நிக்கராகுவாவில் பெண்கள் இவ்வளவு விரைவில் கிளர்ந்து எழுந்து போர்க்களம் போனார்கள் என்றால் அதற்கு காரணம் அமெரிக்க நிர்வாகத்தின் தான் தோன்றித்தன நடவடிக்கைகளும் சோமோசாவின் ஒடுக்குமுறையுமேயாகும். இவர்கள் ஆண் போர் வீரர்களுடன் சரிநிகர் சமமாக துணிச்சலுடன் போராடினார்கள். இவ்வீராங்கனைகளின் வழி வந்தவள்தான் மேரிலஸ் ஸெரானோ. இவள் சான்டினிஸ்ட்டா மக்கள் படையில் சேர்ந்து 6 வருடமாக தலைமறைவாக பணிபுரிந்து வந்தாள் பின்னர் 6 வயதினிலேயே சர்வாதிகாரி சோமோசாவின் துருப்புக்களை எதிர்த்து போராட தொடங்கினாள். அப்போ கொமான்டோ படைப்பிரிவின் பொறுப்பாளரான ஜில்லர் மோலை மணந்து அடுத்த மாதத்திலேயே விதவையானாள். இவளது கணவனை மட்டுமல்ல சகோதரனையும் நிக்கரகுவாவின் விடுதலைக்கு விலையாகக் கொடுத்தாள்.

இதுபோன்ற எத்தனையோ இடையூறுகளும் இழப்புகளும் வந்தும் நிக்கரகுவா வீரமாதர் சிந்தையில் எந்தவித சலனமும் ஏற்படாமல் முன்னிலும்

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எமது நோக்கு

[2ம் பக்கத்தொடர்ச்சி]

கண்மூடினாலும் தற்போது முன்னணியில் நின்று மிகவேகமாக தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவுகாட்டிவரும் பல பிற் போக்கு சக்திகளுக்கு கடை விரித்த வர்களாவோம்.

எம்மைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தை நடவடிக்கைகளை ஒரு கையிலும், மறுகையில் மக்களை போராடத்தில் இணைக்கவும் வழி செய்ய வேண்டும். அதாவது மக் கள் போராட தளம் அமைத்துக் கொடுக்கவேண்டும். தவறி கடந்த காலம்போல் மக்கள் எமக்கு தளம் அமைத்துத் தரும் நிலை இனியும் தொடரு மானால் மக்களை காப் பாற்ற முடியாதவர்களாகி, முழு மக்களையும் அழிக்க வேண்டிய சூழ்நிலையை அல்லது நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டிய சூழ் நிலையையே ஏற்படுத்தியவர்களா வோம்.

எனவே ஒவ்வொரு விடுதலைப் போராட்ட அமைப்புகளும் நேரிய பேச்சுவார்த்தைக்குரிய நடவடிக் கைகளை முன்னெடுப்பதோடு, அதாவது இராணுவரீதியான சம நிலையையும், சர்வதேச ரீதியாக சிறிலங்காவின் ஆயுதக் கொள் வனவு நடவடிக்கைகளை தடை போடும் முயற்சிகளை முன்னெடுப் பதோடு, தத்தம் போராட்ட அணிகளையும் பலமாக்க வேண் டும். இதன்மூலமே தளப்பிரதேசங் களை பாதுகாக்க முடியும். இப் படியாக அணிகளால் பலமாக்கப் பட்ட பிரதேசங்களே முதலாளித் துவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களாக கருதப்படும். இவ் அணிகளால் பலமாக்கப்பட்ட பிரதேசங்களிலேயே எம்தோழர் களைக் காப்பாற்றி தமிழீழப் போராட்டத்தை வென்றெடுக்க முடியும். ★


## "தமிழீழத்தின் குரல்"

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்

**அதிகாரபூர்வ வானொலி ஒலிபரப்பு**

அலைவரிசை: S. W. 49M 6800 —6900 KHz.
S. W. 41M 7000 — 7100 KHz.

தமிழ்

*புதன் — காலை 7-00 — 7-30 மாலை 4-00 — 4-30*
*சனி, ஞாயிறு — காலை 8-00 — 8-30 மாலை 4-00 — 4-30*

ஆங்கிலம்

*புதன் — காலை 7-30 — 8-00*
*சனி — காலை 8-30 — 9-00*
*ஞாயிறு — மாலை 4-30 — 5-00*

சிங்களம்

*புதன் — மாலை 4-30 — 5-00*
*சனி — மாலை 4-30 — 5-00*
*ஞாயிறு — காலை 8-30 — 9-00*


## நமீபியா . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு மைக்கல் ஆக அமைத்தது. "Swapo" அங்கோலாவைப் பிரதனமாகக் கொண்டு இயங்கி வரலாயிற்று. அதே சமயம் "Swapo" கட்சி வடிவம் பெற்று சர்வதேச ரீதியாக இயங்கி வரு கின்றது.

இவ்வாறு, "சுவாப்போ" பலம் பெற்ற அமைப்பாகவும் நமீபியா நாட்டு மக்களின் விடுதலைக்கு ஐ.நா முழுமையாக உத்தரவாதம் வழங்கியிருந்த போதிலும் ஆபிரிக்கா நிறவெறி அரசுடன் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஐரோப்பிய முதலாளித்துவங் களும் இணைந்து கொண்டு அம் மக்களின் விடுதலைப் போராட் டத்தை முறியடித்து வருகின்றது.

இவ்வாறு, நமீபியா மக்களின் விடுதலைப் போராட்ட வடிவத் தையும், அம்மக்கள் இன்று வாழ போராடிவரும், "Swapo"வின் வரலாற்றையும், எடுத்துப் பார்க் கும் பொழுது, இன்றைய கால கட்டத்தில் எந்தவொரு விடுத லைப் போராட்டமும், ஏகாதிபத் திய எதிர்ப்புப் போராட்டமாகவே வர்ணமிப்பதை முடிவாகக் கொள்ளலாம். இவ்வாறு, நமீபியா நாட்டு மக்களின் நிலை யுடன் தமிழீழ மக்களின் நிலை யையும் எடுத்துப் பார்க்கின் இக்கூற்று வரலாற்று உண்மை யாகும்.

முற்றும்

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்ப்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல் லோருக்கும் படிக்கக் கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்புத் திணைக்களம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

Published by People's Liberation Organisation of Thamil Eelam, 40 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, UK
Printed by Grafton Litho Ltd (TU), 5a Old Town, London SW4 0JT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்